பாதையில் சாலை அமைப்பதற்கு பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறை விண்ணப்பிக்க வேண்டும், அல்லது, மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையினால் சாலை அமைக்க விண்ணப்பிக்கப்பட வேண்டும். இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. ஆகையால், இந்த இரண்டு துறைகளில் எந்தத் துறை விண்ணப்பித்தாலும் வனப் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகளின்படி மைய அரசினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதி மக்களுக்கு சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 490, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

490—

மேம்பாலம்

***8372—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், போந்தவாக்கம்—மாதர்பாக்கம் இடையிலுள்ள தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், போந்தவாக்கம்—மாதர்பாக்கம் சாலையில் தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது பணி மெதுவாக நடைபெற்று வருவதால், இப்பணியை மழைக் காலத்திற்குள் விரைந்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், போந்தவாக்கம் முதல் மாதர்பாக்கம் இடையே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்குக் கோரிய சாலை கொல்லடம்—மாதர்பாக்கம் சாலை ஆகும். இச்சாலை மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் 5/4 மற்றும் 6/6 கிலோ மீட்டரில் 2 தரைப் பாலங்கள் உள்ளன. இத்தரைமட்டப் பாலங்களுக்கு மாற்றாக உயர்மட்டப் பாலம் ரூ.49 இலட்சம் செலவில் அமைப்பதற்கு 2012—2013 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்போது பாலங்கள் விரைந்து கட்டப்பட்டு வருகின்றன. 5/4 கிலோ மீட்டரில் சுமார் ரூ.24 இலட்சம் செலவில் கட்டப்படுகின்ற பாலப் பணியில் 40 சதவிகிதப் பணி முடிவு பெற்றுள்ளது. அதுபோல 6/6 கிலோ மீட்டரில் கட்டப்பட்டு வருகின்ற உயர்மட்டப் பாலம் ரூ.25 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. அதில் 70 சதவிகிதப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய பணிகளை விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல தொகுதி மக்களின் 50 ஆண்டுகால கோரிக்கையான ** ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் மாநில நெடுஞ்சாலையான.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இதுகுறித்து தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மூலக் கேள்வியை ஒட்டி கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) ** என்று மாண்புமிகு உறுப்பினர் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மூலக் கேள்வியை ஒட்டி கேள்வி கேளுங்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் மாநில நெடுஞ்சாலையில் ஆரணி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் உள்ளது. மழைக் காலங்களில் சுமார் ஒரு மாத காலத்திற்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. ஆகையால், தொகுதி மக்களின் 50 ஆண்டுகாலக் கோரிக்கையான உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் சாலையில் ஆரணி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் தற்போது இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாற்றாக உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா தொடுத்திருக்கிறார்கள். நிதிநிலைக்கு ஏற்ப, எதிர்வரும் காலங்களில் இதுகுறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 491, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.